பிஸ்மில்லாஹ்

பறங்கிப்பேட்டை

காட்டாணைப் பதிகம்.

ஆக்கியோன் :

சுலு. அப்துல் ரெஜ்ஜாக்கு,

பறங்கிப்பேட்டை.

1929

O7:417
N29
223089

"ஹாவல்ஹாதி."

மஹ்மூது பந்தர்

மெய்ஞ்ஞானசொரூபி ஹஜரத்து காட்டாணை
செய்கு அப்துல் காதிர் சாஹிபு ஒளலியா
அல்லா (ஹ்,) ஆண்டவரவர்கள்

பதிகம்.

இது
பிறைசை லுத்தரன் மிசியோன் பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதரும், மதுரைத் தமிழ்ச்சங்க
உறுப்பினருள் ஒருவருமாகிய,

ஸ்ரீமாந் : ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையவர்களின்
மாணவரும்,

பறங்கிப்பேட்டை
தன்வீம் கழகத்தலைவருமாகிய காட்டாணை

சு லு. அப்துல் றெஜ்ஜாக்கு சாஹிபு அவர்கள்
இயற்றியது.

PRINTED AT THE MANORANJINI PRESS,
2, RAMANUJA IYER STREET,
SOWCARPET, MADRAS.

சிறப்புப்பாயிரம்.

இது

ஸ்ரீகாழிக் கல்விக் கழக ஆசிரியரும் லுத்தரன் கிறிஸ்தவக்
கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய
மஹா வித்துவ ஸ்ரீமான்

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்றது.

மணிமுத்தங் கொழிக்கும் வாரி
வளமுறும் பறங்கிப் பேட்டை
யணிமுத்தங் காட்டு மானை
யருளொலி யவர்கள் மாலை
பணிமுத்த மென்னப் பாடிப்
பரவின னட்துல் றஜ்ஜாக்
கணிமுத்தக் கவிஞன் வாக்கி
கணக்கில்சீர் வாய்மை யோனே.

இவை

இந்நூலாசிரியரின் போதகாசிரியர்

ஸ்ரீமாந்: ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையவர்களால்
இயற்றப்பெற்றன.

மலர்நறை குடைந்து நாக மடல்படிந் தொளிய மேனி
நிலவு செந்தே னுறுத நிறைவளப் பறங்கிப் பேட்டை
அலகறு கிமலன் செய்கு அப்துல்கா திருவின் சீரே
குலவுமாப் பதிகங் கோத்த குணமணிப் பனுவலானே.

திடமுறு பத்தி யுள்ளான் செய்பணி தன்வலீம் கூட்டத்
துடனுறு தலைவ னென்பா லுணர்ந்து செந்தமிழ்நூ லாய்ந்
புடவியிற் சுல்தான் சாபு புங்கவன் றந்த செம்மல் [தோன்
அடனுறு மப்துல் ரஜ்ஜாக் கருட்பெருஞ் செல்வன் மாதோ.

இது

பறங்கிப்பேட்டை வித்வ ஸ்ரீமான் திருநெறித்தமிழ்

ஆ. நாராயணஸ்வாமிப்பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்றது.

சீர்சான்ற காட்டனைச் செய்கப்துல் காதிரொலி
பேர்சான்ற சொற்பதிகம் பேசினன்—ஏர்சான்ற
வண்ணக் கலையான் மகிழப்துல் ரஜ்ஜாக்கென்
திண்ணக் கலையான் றிறம்.

"பிஸ்மில்லாஹி"

மஹ்மூது பந்தர்

மஹா வித்வான்

கா. முகம்மதப்துல்காதிர் மரைக்காயரவர்க ளியற்றிய

சாற்றுக்கவி.

நேரிசை வெண்பா.

காட்டானை செய்கப்துல் காதிர் வலிப்பதிகஞ்
சூட்டினன் அம்மரபிற் றோன்றிய—காட்டானை
அப்துர் ரெஜாக்கே அருங்கவிச்சீர் எவ்விதத்து
மொப்பற்ற தென்றே யுணர்.

இது

கூடலூர் ஆயுர்வேத பாஸ்கர வித்வ ஸ்ரீமாந்:

S. M. ஜெய்னுல் கவுஸ் பாவலரவர்களால்

இயற்றப்பெற்றது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வாட்டானை யுறுமிறைவ ரென்றென்று மிறைஞ்சுபுகொள்
வடுக்க டாளின்
மாட்டானை கண்படுமால் மகுமூது பந்தரெனும்
வளங்கொ ளூரின்
காட்டானை செய்கப்துல் காதிறொலி யுல்லாமேற்
கவிஞர் போற்றும்
பாட்டானை கரமொரிய பதிகமப்துல் றஜ்ஜாக்குப்
பகர்ந்தான் மன்னோ.

இது.

பறங்கிப்பேட்டை பிரபல சோதிட வைத்திய
பண்டிதரும் தமிழ்ப் புலவருமாகிய
ஸ்ரீமாந்: சு. ஏ. குமாரஸ்வாமி யாச்சாரியாரவர்கள்
இயற்றியது.

தாட்டா மரைப்பதந் தந்தருள் ஞானத் தயாபரனுங்
காட்டானைச் செய்கப்துல் காதி ரொலியணி காட்டியசொற்
கூட்டா தரவுறை மாப்பதி கந்தமிழ் கோத்தனனுற்
றேட்டார் தனமென வப்துல் றெஜாக்கெனுஞ் சீரியனே.

பிஸ்மில்லாஹி.

அபிப்பிராயம்.

கல்வியுஞ் செல்வமுங் காணத் திருவருள்
வல்ல பரம்பொருள் மனம்பெறு துணையே.

இப்பதிகம் ஹஜரத் காட்டானை ஷைக் அப்துல் காதிர் சாஹிபு வலியுல்லா (ஹ்) ஆண்டகையவர்கள் மீதியற்றப் பெற்றது. இந்நூலாக்கியோர் இப்பாட்டுடைத்தலைவரின் பௌத்திர பௌத்திரராவர். இவர் நஞ்செந்தமிழ்ப் பாஷையில் தேர்ச்சி பெற்றவர்.

இவ்வாசிரியர் எங்கழகத் தலைமை யேற்று செவ்வனே பரிபாலிக்கும் போராற்றல் வாய்ந்தவர். இந்நூல் செவிக்கினிய செம்பாகச் செய்யுள்களால் ஆக்கப்பெற்றிருக்கின்றது. இவர் சர்வசக்தி அல்லா (ஹ்) அருளால் இதுபோன்ற பல அரிய நூல்களை வெளியிட்டு நம்முஸ்லீம் முலகம் உவப்புறுமாறு முன்னேற்றமடைவாராக. ஆமீன்.

கற்றார் கல்லார் காணும் நபிகள்
கற்று வென்னக் கனிந்தருள் தருமே.

இங்ஙனம்,

Porto Novo
5th June, 1929

B. A. Hussain,
Secretary, Thanzeem Committee.

"பிஸ்மில்லாஹிற்றஹ்மாநிற்றஹீம்"

காப்பு.

நிலைமண்டில வாசிரியப்பா.

ஆதியா யலதா யவயவ மிலதாய்ச்
சோதியா யிலகிச் சுடரென மிளிரு
மெல்லாம் வல்ல விறைவன் பேரருள்
அல்லல் களைந்திங் காட்கொளு மெனையே.

நேரிசை வெண்பா.

சுஞ்ஞான மாகச் சுடரும் பெரியோனே
மெய்ஞ்ஞானந் தன்னை விளைவித்து—நெஞ்சாருஞ்
சீரியனே யல்லாவாஞ் செல்வத் திருமணியென்
ஞாரியனே யாள்வா யமர்ந்து.

ஹக்கன் தனக்குகந்த தூதர் முஹம்மதுவே
மிக்கதோர் நன்னயத்து மிஸ்கீன்பால்—தக்கநெறி
எக்காலும் இத்தரையில் ஈந்துதவி யாண்டருளும்
மக்காவின் மிக்காஞ மன்.

நாய னருஷதிலே நற்றாக்கந் தானடைந்தீர்
மாய னிபுலீசை மன்னித்தீர்——தூய
முஹையத்தீ ஞண்டகையே முப்பழமுந் தேனுந்
தகையவிரு தாண்மலரைத் தா.

குறள் வெண்பா.

சாட்டாங்க மாய்ப்பணிந்தாற் சாயுச்சந் தந்திடுமே
காட்டானை காதிருவின் கால்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நூல்.

உலகெலாந் தழைக்க வுயர்தரு தீனென்
றுரைத்தருண் முத்தியின் மார்க்கத்
திலகமா நபியின் திருவுரை யாகத்
தீட்டிய திருமறைத் துணிபால்
அலகிலா மகிமை யடைந்தபே ராளர்
அபூபக்கர் வழிவழித் தோன்றல்
கலகமில் காட்சி முஹம்மது பந்தர்
கவினப்துல் காதிரெம் மொலியே. 1.

கலையுணர் புலவ காத்தருள் வரத
கல்வியே யறிவொடு திகழ
மலைதனில் வாழ்ந்த மண்டதை தமது
மனதிடை கோயில்கொண் டறிய
விலைமறை காய்போ விலகிடு மணியே
ஏழையேற் கிரங்கியிஞ் ஞான்று
அலைகட லொலிசேர் முஹம்மதுபந்தர்
அணியப்துல் காதிரெம் மொலியே. 2.

சென்னியிற் காய்ப்பும் ஜெபமணி தஸ்பீ
சிவணிய வேடமே பூண்டு
பன்னெடு நாளாய்ப் பரம்பரற் பணியும்
பற்றினர் போனடித் தலைந்தே
னென்னினு மென்னை விடுதியோ கருணை
யெழிற்பெறுங் கமலச்சே வடியே
கொன்னியல் விளங்கும் முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 3.

வெப்புறு நோயால் விரவிடு சுரமும்
வெவ்விய மூலமுங் கயமும்
கைப்புறு பித்த வாதமுஞ் சேர்ந்து
கான்றிடு பற்பல பிணியு
மெய்ப்புற மேவா தெனைவலிந் தாண்ட
வெந்தையே காமிலா மண்ணுல்
குப்பமார் வளநீர் முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 4

பல்விட முள்ள பாந்தளு மட்டைப்
பல்லியுந் தேளொடு பூரான்
சில்விட மென்னுஞ் சிலந்தியும் வண்டு
செய்திடு மவத்தையும் பிறவும்
புல்லிய வரக்கர் பேய்க்கண மாதி
பொருபல விடர்களுந் தீரக்
குல்லிய மறைசேர் முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 5.

எழுத்தசை தளைசீ ரடிதொடை யாதி
யிலங்கிடு வகைபெறு துறையான்
வழுத்துமா றறியேன் வண்டமிழ்த் தலைவா
வள்ளலே வலியுலா மணியே
விழுத்தகு சொல்லால் வெய்யரைப் பாடி
வீணிலே நாட்களைக் கழித்தேன்
குழுக்கொளும் புலவர் முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 6.

இ   கண வரம்பு மிலக்கிய நிறைவு
மெளியனேன் பெறும்படி விளங்கக்
கலக்கமில் கருணைத் தடங்கட லாய
கத்தனே கடைக்கணித் தருள்வாய்
துலக்கமிற் றீயோர் தம்மையு மாண்ட
தூயனே துரிசிலா ஷாபிக்
குலத்தவர் பணியும் முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 7.

அன்பினு லுன்ற னடியிணை பரவா
தலைந்தலைந் தயர்வுறு கின்றேன்
துன்பநோ யகற்றுந் தூயபொற் பதனே
தூதனார் மாதுலர் மரபோய்
வன்பவத் தொடக்கை மாற்றியே யுமது
மலரடி மகிழ்ந்துகொண் டவர்தம்
கொன்பதம் விழைய முஹம்மது பந்தர்
குலவப்துல் காதிரெம் மொலியே. 8.

பண்டொரு முதியாட் பாலன தின்னற்
பகரவே பரிந்தருள் புரிந்து
விண்டிட வொருசொல் விக்கினந் தொலைந்தே
விளங்கிய தச்சிறு பிள்ளை
அண்டினர்க் கெளியோய் அற்புத விலாயத்
தருண்மழை பொழிந்தரு ளெந்தாய்
தொண்டரின் தொழுகை துலங்கொளிர் பந்தர்
துணையப்துல் காதிரெம் மொலியே. 9.

Q7:417
N3

மரித்தபி னுயிர்த்து மாண்புடைச் சீடன்
மாதவ மணியென வழியிற்
சரித்தவன் வேண்டிச் சலாஞ்சொலி யழைக்கச்
சாந்தமாய்ப் போவெனப் பணித்துச்
சிரித்தவன் மீளச் சித்தனா மென்னச்
சென்றனை செல்லலைக் கடந்தோய்
உரித்தெனச் செல்வ முஹம்மது பந்தர்
உயரப்துல் காதிரெம் மொலியே. 10.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்னனைய ஹல்லாஜி பூவடிக் கன்புளம்
பூத்துத் தழைக்க வேண்டும்
புத்தமுத மாகுசீர் அற்புதப் பத்தர்சொல்
பொற்கவி மிகுக்க வேண்டும்
அன்னர்மொழி செஞ்சுவைச் சொற்பெருக் கென்னுளம்
ஆதரிப் பிக்க வேண்டும்
ஆகம புராணங்க ளோதுநின் சந்நிதி
யடைந்தன்பு கொள்ள வேண்டும்
மின்னனைய மாதரார் மேதினி செல்வமிவை
மீதாசை நீக்க வேண்டும்
விருப்பொடு வெறுப்பிலா வித்தகர்கள் பக்தியும்
விளங்கிநனி மிளிர வேண்டும்
சொன்னமய தருகாவின் சோதிரவ் லாமீது
தோன்றுபே ரன்பு வேண்டும்
தோலாத கல்வியும் துவளாத நீதியும்
தோன்றவருள் காதி ரொலியே.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வாழிய ஆதம் நூஹறு வழிகொள்தா ஹாவும் வாழி
வாழிய குதாபு கௌது வாகை யாரீபு செம்மல்
வாழிய மீரு ஞேடு வள்ளலா மொலிமா ரெல்லாம்
வாழிய முஸ்லீம் வையம் வளம்பெற வாழி மாதோ.

முற்றிற்று.

நபிகணயகர்மீது அரும்பதம்.

[மதியை நிகர்வதன என்றசந்தம்]

பல்லவி.

மதியை நிகரொத்த மன்னர் முஹம்மதை யிந்த
மாநிலம் துதித்து நான் பாடுவேனே. மதியை

அநுபல்லவி.

நிதியே பதியே முஹம்மதே யுமைக் கண்ணுல்
நிலையுடனென்று நான் காண்குவேனே, மதியை

சரணங்கள்.

கனவிலோ நனவிலோ காரணரே உம்மைக்
காணுவிடிலென் ஆவல் தீருவேனே [நிதியே] மதியை
தூதரே துரையே தூய்யவன் ஞெளியும்மைத்
துனியாவில் நான் பார்த்திடுவேனே [நிதியே] மதியை
கானவில் நீரே கடுகவழைத்திரே உம்மைக்
கல்பில் எண்ணித் துதித்திடுவேனே [நிதியே] மதியை
ஆமிஞர்மகவே அப்துல்லா பாலரே உம்மைப்
பூமியிலின்று பணிந்திடுவேனே [நிதியே] மதியை
காட்டானையப்துல் ரெஜ்ஜாக் கருதியே உம்மைக்
காலமெல்லாம் புகழ்பாடுவேனே. [நிதியே] மதியை

குத்துபுகணுயகர்மீது அரும்பதம்.

[முஹப்பத்கை ரஸேமேரி என்றசந்தம்]

பல்லவி.

அதிகாரா அபூசாலிஹ் அருள்பாலா குதூபுல்லா
துதிஞனே செய்குவேனே துணைபுரியும் ஒலியுல்லா

அநுபல்லவி.

எழில்சேரும் தொழில்ஏறும் பகுதாதாளும் குதூபுல்லா
நிழல்போலும் எதிர்காலம் எனைக்காரும் ஒலியுல்லா

சரணங்கள்.

முஹையதீனே முழுதுந்தானே நம்பினேனே குதூபுல்லா
முற்றும்நானே உம்மைத்தானே மறவேனே ஒலியுல்லா

ஐயன்மீரே சுல்தான்பீரே தஸ்தகீரே குதூபுல்லா
மெய்யன்பீரே மேதினிகாரே காஜாநீரே ஒலியுல்லா

பண்டுதானே மரித்தோனே மீட்டீர்கோனே குதூபுல்லா
சென்றுகானே தவந்தானே செய்தீர்தீனே ஒலியுல்லா

குத்பு ரப்பானி கவுதுஸமதானி பதீஜெய்லானி குதூபுல்லா
கிந்திலேனூரானி காஷிபுல்மகானி இமாம்சுல்தானி
[ஒலியுல்லா

மஅஷுகுல்லா மஹ்பூபுல்லா தோஷம்நில்லா குதூபுல்லா
ஆஷிக்வல்லா காட்டானை அப்துல் றெஜ்ஜாக்கையாள்
[ஒலியுல்லா.

முற்றிற்று.

அவ்வவ்வமயங்களிற்பாடிய பலவகைக் கவிகள்.

நேரிசை ஆசிரியப்பா.

உலகம் படைத்த ஒருதனி முதல்வன்
அலகில் சோதி அல்லா ஹுத்த
ஆலா அருளால் அனுதினம் நாளும்
சீலமாய் ஒழுகி சீர்த்தனை எழுத்தொடு
அடிதொடை யாதி யலங்கல் சொற்றிட
திருநபிப் பெருமான் மருவி
பொருவிலாச் செல்வம் புகழ்ந்தளித் திடுமே.

நேரிசை வெண்பா.

காட்டானை செய்கப்துல் காதிரொலி மேற்பதிக
சூட்டாத மாந்தருமே தூய்மையிலர்—வாட்டாரி
மன்னர்புகழ் வள்ளலென்று வாழ்த்துமவர் தம்
என்னென் றிசைப்ப திசைந்து. [பெரு

நிலைமண்டிலவாசிரியப்பா.

எங்க ளிறைவர் இணையிலா நபிகள்
தங்க மொழியர் தயாபரச் சீலர்
திங்க ளென்னத் திருவருட் பெரியார்
மங்கள மாக மன்பதை யதனை
ஆக்கி யருளி அறுதின மாண்டு
ஆக்கந் தந்த அமலனைக் காட்டும்
புகழ்ச்சிக் கண்டு பொருளடை பெரியோய்
பழிச்சுனர்க் கெல்லாம் பதம்தரு சீல
ஹல்லாஜ் என்னும் அருந்தவ மணியே
நல்லார் நாடும் நற்றவப் பொருளே
நின்பதம் பணிந்து நின்னையே துதிக்க
எண்ணிய எற்கு இன்னருள் புரியே.

நேரிசை வெண்பா.

மான்பேசுங் கோமான் மறைவழியி னென்முன்னோர்
தான்பேசும் ஹல்லாஜி தன்மகிமை—வான்பேசிச்
சூழ்ந்திறைஞ்சு காட்டானைத் தூயவனு மாண்ட
வாழ்ந்திலங்க வைப்பான் மகிழ்ந்து. [கையே

கொச்சகக் கலிப்பா.

ஆசானெங் கிருட்டினனு மருங்கலைஞன் திருவருளே
பாசமாய் என்மீது பரவிவர அருடருவாய்
ஈசனும் யாறஹீம் இணையிலியே யென்றென்றும்
தாசனும் அப்துல்ரெஜாக் தரைமீது புகழ்பெறவே.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஏர்நிலவொளிருமுற்றமிலங்கியபறங்கிப்பேட்டை
சீர்நிலவொளிருங்கல்விச்செல்வமும்செல்வவாழ்வும்
பேர்நிலவொளிருஞ்சீர்த்திப்பெற்றியன்கிருஷ்ணசாமி
பார்நிலவொளிருமாசான்பகர்பெருநட்பினனே.

கொச்சகக் கலிப்பா.

அலைகடல்சூழ் புவியதனில் அல்லாவே அருமை [மிகு
கலையதனை யநுதினமுங் கற்றறிய அருள்புரிவாய்
மலையைநிகர் யாப்பணியும் மலையாமல் மனதினிடை
வலையிடையே படுமீன்போல் வாய்ந்திடவே [ஆண்டருளே.

பின்முடுகு வெண்பா.

தபப மிரண்டிரண்டிற் றண்சவுக்கு வோரிரண்டாங்
கம்பனிக ரெம்மாசான் கட்டிடமே—உம்பருயர்
செம்பொனொளி பம்பிமிளிர் செம்பொருள்க
நம்பனருள் நன்றுதவு நாடு. [டங்குமனே

அறுசீர் விருத்தம்

சீர்சான்ற கலையழகன் சிங்கார முகவழகன்
சீர்த்தி மிக்கப்
பார்சான்ற பண்பழகன் பக்திபெறு மனத்தழகன்
பகரற் கேலாப்
பேர்சான்ற தனமுடையார் பெருகிவளர் பறங்கிநகர்ப்
பெற்று வாழ்வோன்
ஏர்சான்ற வெனதாசான் எழிற்கிருஷ்ண சாமியெ
ஏந்தல் மாதோ.

ஆமீன்.

—:o:—